"நமது பிரச்சாரம்-திக்கெட்டும் முழங்கட்டும்!"

திராவிடநாடு

மலர் 11 | 22—2—53 | இதழ் 34

விலை 2 அணா.

# தொல்லைகளைத் தாங்கி தொண்டு புரிவோம்

## "தூற்றுவோர் சிலர்; அனுமதிப்போம் அவர்களை!"

## கோவை மாவட்டத்துக்கு வாழ்த்து

### பொதுச் செயலாளர் பாராட்டுரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சாரம், நடந்து கொண்டேயிருக்கவேண்டும். மாற்றுக்கட்சி மனப்பான்மை கொண்டோரில் கடைசி ஆள் இருக்கும் வரையில், நமது பணி நடைபெற வேண்டும் — நாடெங்கும். நாட்டின் துயர்துடைக்க, ஆர்வத்துடன்—ஆனால் அமைதியுடன், பணிவன்புடன்—ஆனால் விட்டுக் கொடுத்து விடாமல் நடைபெற வேண்டும்"—என்று மேட்டுப்பாளையத்திலே நடைபெற்ற கோவை மாவட்ட மாநாடுகளின் முடிவில், பாராட்டிப் பேசிய பொதுச் செயலாளர் அண்ணாதுரை குறிப்பிட்டார்.

உடல் நலக்குறைவாலும், மார்பு வலியின் விளைவாகவும், பொதுச் செயலாளர் கொஞ்ச நேரமே பேசினார். அவர் ஆற்றிய சொற்பொழிவின்போது, மாநாட்டை நடத்திய தோழர்களுக்குத் தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார்.— "மேட்டுப்பாளையம் மலைப்பிரதேசம். பாங்கான பூமிகளில் விதையை சுலபமாகத் தூவலாம். ஆனால் மேட்டுப்பாளையம் பாறையாலான பூமி. சுலபத்தில் பிளக்க முடியாது. பிளந்து விட்டால் பாங்கானபூமிகளில் கிடைப்பதைவிட நல்ல கனிபொருள்கள் கிடைக்கும். குறையில்லாமலே நம்மைத் தூற்றுகிறார்களே மாற்றுக் கட்சியினர், என்று கோபப்படாதீர்கள். தூற்றுகிறவர்கள் எல்லாம் குற்றம் கண்டுதானா தூற்றுகிறார்கள்? பட்டப்பகல் பனிரெண்டு மணிக்கு, அடிக்கால்சூடேற தார் ரோட்டில் நடந்து செல்கிறவன், எதிரே—மெருகு குலையாத காருள்ளே மேனி மினுக்கியான ஒருவன், பக்கத்திலே சீமாட்டியுடன் பவனி சென்றால், 'போகிறான் பார் சோற்றுமூட்டை' என்றுதான் சொல்லிவிட்டுப் போவான். அவனுக்கும், இவனுக்கும் யாதொரு விரோதமும் இருக்காது—அவனும் இவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கூட இருக்கமாட்டார்கள்! அதைப்போலத்தான் சிலர், நம்மை தூற்றுகிறார்கள். போகட்டும், அந்த வகையிலாவது அவர்கள் அடைகின்ற ஆனந்தத்தை நாம் ஏன் தடுக்கவேண்டும்?" என்றும் குறிப்பிட்டார். "திராவிட இயக்கக் கருத்துக்களை எவ்வளவு ஆர்வத்துடன் பரப்பவேண்டுமோ, அவ்வளவு ஆர்வத்துடன் பரப்பும்படி உங்களை வேண்டுகிறேன்" என்றும் வெளியிட்டார்.

மாநாட்டின் முடிவில் பொதுச் செயலாளர் ஆற்றிய சொற்பொழிவில் அவர் வெளியிட்டதாவது:—

இரண்டு நாட்களாக இங்கு நடைபெற்ற மாநாடுகளினால் நல்ல மனநெகிழ்ச்சியைப் பெற்றிருக்கின்றீர்கள். சந்தேகப் பட்டவர்களுக்கு சந்தேகம் நீங்கியிருக்க வேண்டும். சஞ்சலப்பட்டவர்களுக்கு சஞ்சலம் மாறியிருக்க வேண்டும். இந்த மாவட்டத்தில்—கோவை மாவட்டமும், நீலகிரி மாவட்டமும் சேர்ந்த இந்தப் பகுதியில் மாநாட்டைக் கூட்டியவர்களின் முயற்சி உண்மையிலேயே பாராட்டத் தக்கதாகும்.

பல்லாயிரக் கணக்கான தாய்மார்கள், எண்ணற்ற வாலிபர்கள், இங்கு கூடி எழுச்சியும், மகிழ்ச்சியுந்தரும் என் தம்பிமார்களின் பேச்சைக் கேட்டீர்கள். அவர்கள் பேச்சில் எல்லா பொருள்களும் இடம் பெற்றன. அவர்கள் கையில் சிக்காத பொருளில்லை.

கடவுள்களிலிருந்து காங்கிரசு வரையில், சாக்ரடீசிலிருந்து மாசேதுங் வரையில், கைத்தறியாளர் பிரச்னையிலிருந்து கண்ணீர் சிந்தும் தஞ்சைத் தரணி வரையில், எல்லா விஷயங்களுமே அவர்கள் பேச்சுகளில் இடம் பெற்றது. கிரேக்க நாட்டிலிருந்து நம் கண் முன்னால் நடைபெறும் விஷயங்கள் வரை விளக்கினார்கள். அகம், புறம், ஆகியவற்றிலிருந்து இந்தக்கால இலக்கியம்வரை அவர்கள் உங்களை அழைத்துச் சென்றார்கள். அவர்கள் காட்டிய இயல், இசை, நாடக முத்தமிழ் இலக்கியத்தையும், சரித்திர ஆதாரத்தையும் கண்டு நான் பெருமைப் படுகிறேன்.

அவர்கள் காட்டிய ஆதாரங்கள் ஆற்றலுள்ளவைகள். ஆற்றல் மட்டுமல்ல, அப்பழுக்கற்றவை. ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக் கொள்ளப் பட்டவை.

நமது மாற்றுக் கட்சி நண்பர்களை இப்பொழுது கேட்டுப் பாருங்கள். 'அண்ணாதுரையைத் தள்ளுங்கள், அவன் கிடக்கிறான் 4 அடி 3 அங்குலம். சம்பத்தை விட்டுத் தள்ளுங்கள், அவன் 150 பவுண்டு. நெடுஞ்செழியனை விட்டுத் தள்ளுங்கள் அவன் மிகவும் நெட்டை'. ஆனால் அவர்கள் கூறுகிறார்களே, திராவிட நாடு பிரச்னை, அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று. எதை மறுப்பார்கள் அவர்கள்?

சாக்ரடீஸ் விஷங்கொடுத்து சாகடிக்கப்படவில்லை என்று மறுப்பார்களா? ஆபிரகாம் லிங்கன் அடிமை விடுதலைக்குப் போராடியதால் சுட்டுக் கொல்லப்படவில்லை என்று மறுப்பார்களா? டெல்லி ஏகாதிபத்தியம் திராவிட நாட்டை அடக்கியாளவில்லை என்று மறுப்பார்களா? எல்லா நாடுகளைவிட இந்த நாடு வளம் நிறைந்தது என்பதை மறுப்பார்களா? இந்த நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தொகை நூற்றுக்குப் பதினாறு என்பதை மறுப்பார்களா? தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறை ஒன்றும் இல்லை என்று கூறி மறுப்பார்களா? கைத்தறி நெசவாளர்கள் கஷ்டமின்றி இருக்கிறார்கள் என்று வாதாடுவார்களா? ஆலைத்தொழிலில் வடநாடு உயர்ந்திருக்கிறது என்பது தவறு என்று கூறுவார்களா? எதையும் மறுக்க அவர்களால் முடியாது. தம்பிமார் கூறியது அவ்வளவும் உண்மை. உண்மை கூறுகின்ற நாங்கள்தான் ஊராராலே சந்தேகிக்கப் படுகிறோம். நண்பர்களாலே சஞ்சலப்படுத்தப் படுகிறோம். எங்களைப் பற்றி நீங்கள் அனுதாபப் பட வேண்டும்.

சேர, சோழ, பாண்டியர்கள் மரபில் வந்துள்ளவர்கள் நாம். புராணக் கற்பனையல்ல, வரலாறு. சிதைந்த வாழ்வு வாழ்கிறோம். இது சரியா? திராவிட நாடு திராவிடருக்கானால் செம்மை பெறுவோம். அது வேண்டாமா? இவைகளைத்தான் நீங்கள் கேட்க வேண்டும். நீங்கள் கேட்க, கேட்க, கோபம் வந்து குறைந்ததும், சரி ஒத்துக் கொள்கிறேன், என்று சலிப்புடன் கூறி, பிறகு தி. மு. கழகத்தில் சேருங்கள் என்றால் சேர்ந்து தொலைக்கிறேன் என்ற நிலைக்குத்தான் காங்கிரஸ் நண்பர்கள் வருவார்கள் நம்மை தெரிந்துக் கொண்டதும். ஆகவே இந்த மாநாட்டை தொடர்ந்து இப்பகுதியிலே நமது பணி நடக்க வேண்டும் என்று பெரிதும் ஆசைப்படுகிறேன்.

எனது உடல் நிலை சரியில்லாததால் வைத்தியர்களின் உத்திரவையும் மீறி உங்களது ஆர்வத்தையும் எழுச்சியையும் கண்டு எனது வேண்டுகோளைத் தெரிவிக்க முற்பட்டேன். இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். ✲

### பாராட்டுரைகள்

மேட்டுப்பாளையம் மாநாட்டின் போது திராவிட மாணவர்முன்னேற்றக் கழகத்தினரால் பொதுச் செயலாளர் சி. என். ஏவுக்கும், மாணவர் கழகப் பொதுச் செயலாளரும் தலைமைக் கழகப் பொறுப்பாளருமான கே. ஏ. மதியழகனுக்கும் வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

## புயல் நிவாரண நிதி

## ரூ. 22461—4—5

[ இதுவரை ]

| | ரூ. அ. பை. |
|---|---|
| முன் கணக்குப்படி | 20303—15—8 |
| மதுராந்தகம் 'வேதனைக்குரல்' நாடக மூலம் | 1001—0—0 |
| இலங்கை டிக்கோயா தோழர் எ. பூவலிங்கம் மூலம் | 100—0—0 |
| ,, தளவாக்கொல்லை தோழர் எம். கனகசபாபதி மூலம் | 91—0—0 |
| சென்னை 13-வது வட்டக்கிளை | 60—0—0 |
| P F. அகஸ்தியன், தென்காசி | 0—5—0 |
| சென்னை, 34-வது வட்ட, நுங்கம்பாக்கம் கிளை தோழர் எல். சங்கரநாராயணன் மூலம் | 8—14—6 |
| திருவல்லிக்கேணியில் தோழர்கள். மு. கருணாநிதி, எம். ஜி. ராமச்சந்திரன், அன்பழகன், இளங்கோ பேசிய கட்டணக் கூட்டத்தில் செலவு போக மீதம் | 400—0—0 |
| ஆமதாபாத், தி. மு. கழகம் | 204—11—0 |
| முந்திரிபாத் துங்கபத்ரா அணை தோழர்கள் தோழர் டி. சொக்கலிங்கம் மூலம் | 88—0—0 |
| பெங்களூர் இராணுவத் தோழர்கள் தோழர் சண்முகம் மூலம் | 8—4—0 |
| ராயப்பேட்டை நண்பர்கள் தோழர் சிவராமன் மூலம் | 10—2—9 |
| சென்னை வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகம் | 7—1—0 |
| ராயப்பேட்டை பெண்கள் படிப்பகம் | 4—8—0 |
| பரவூர் (திருவாங்கூர்) தோழர் சுப்ரமணியன் | 5—0—0 |
| பூனா தோழர் புரட்சிவீரன் மு. எல்லப்பன் | 3—0—0 |
| சிறு மதுரை தி. மு. கழகம் | 2—0—0 |
| திருவல்லிக்கேணி தோழர் கோதண்டபாணி | 1—0—0 |
| டெல்லி இராணுவத் தோழர் ராமலிங்கம் | 1—0—0 |
| எம். சி. எஸ். பஸ் வீராசாமி செட்டியார் மகள் தோழியர் சாந்தா | 51—0—0 |
| பாலக்காடு தோழர் ரங்கநாதன் | 15—0—0 |
| வால்பாறை அண்ணா வாசகசாலை பிச்சமுத்து, ஜபக்கினி | 10—0—0 |
| கோவை தோழர் எ. பி. பாபு | 1—6—6 |
| பீளமேடு தோழர் நா. சண்முகம் | 2—0—0 |
| செட்டிபட்டி தி. மு. கழகவைச் சேர்ந்த பரமசிவம் | 5—0—0 |
| கோவை காந்திகேப் | 5—0—0 |
| கோபி தவசியப்பன் | 1—0—0 |
| காரமடை டாக்டர் தங்கம் | 2—0—0 |
| 7—2—53 அன்று நாகவேடு வள்ளுவர் கழக ஆதரவில் சி. பி. எம். சாமி, எம். என். டி. சாமி குழுவினர் நடித்த 'மந்திரி குமாரி' நாடகத்தில் செலவுபோக மீதம் | 101—0—0 |
| சிதம்பரம் ராமலிங்கம் | 3—0—0 |
| அவலிவன நல்லூர் சௌந்தரதாஸ் தேவர் | 1—0—0 |
| இலங்கை எஸ். ஆறுமுகசாமி | 25—0—0 |
| பரங்கூர் பொதுக் கூட்டத்தில் | 11—0—0 |
| | 22461—4—5 |

மு. கருணாநிதி
நிதிக்குழு செயலாளர்
தி. மு. க.

திராவிடநாடு

காஞ்சி] 22—2—53 [ஞாயிறு

# ஏன் இந்த நிலை?

✶

சாக்கடையில் போய்ப் புரண்டு, சகதியையும் நாற்றத்தையும் பூசிக் கொண்டு, அழகான வீட்டின் அந்தப்புரத்துக்குள் நுழைய, அதைக்கண்ட காதலி, "ஆருயிர்க் காதலரே! ஏனிந்த கேடு? சேற்றில் குளிப்பதேன்! நாற்றம் வீசுவதேன்! சகிக்கவில்லையே, என்னால்!" என்று சோகத்தோடு கேட்க — "என்ன செய்வேன், ஏந்திழையே! சாக்கடையில், மணமில்லை — அதனால் தான் நாறுகிறது. சாக்கடையில் சந்தன வாசனை வரச்செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்; அந்நாள் எந்நாளோ?" என்று அங்கலாய்த்துக்கொண்டால், அத்தகைய கணவனைப்பற்றி, என்ன நினைப்பீர்கள்—நீங்கள்? அசடோ! பைத்யமோ!! அரைலூசோ!!! — என்று தானே, எண்ணுவீர்கள்.

நாம் அறிமுகப் படுத்தும் கணவன், அத்தகையவரல்ல. ஆனாலும், சாக்கடையில் சந்தன மணம் விரும்புகிறார்! சந்நியாசி அல்ல— 'சக்கரவர்த்தி' யெனும் பட்டப் பெயர் பெற்றவர்!! அவர் எதிர் பார்க்கிறார், இதனை. அரசியல் மேதை, அறிவாளி, வேதாந்த விசாரணையில் திளைப்பவர் — என்றெல்லாம் போற்றப்படும் 'சக்ரவர்த்தி'யாம். ராஜகோபாலாச்சாரி அவர்கள்தான். நாம் அறிமுகப் படுத்திய கணவனைப் போல பேசுகிறார்.

பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டனராம். அப்போது கைத்தறியாளர் பிரச்னை பற்றி பேசினாராம். அதற்குப் பதிலளிக்கும் போதுதான், 'சாக்கடையாயிருக்கிறதே! என்ன செய்வது?' என்று, விசனப்பட்டிருக்கிறார்.

சின்னஞ்சிறு வீட்டிலிருக்கும் கணவன்!—சிங்காரமான நாட்டினை ஆளும் ஆச்சாரியார்!!

வீட்டிலிருக்கும் கணவன், சாக்கடையில் மணமில்லை!' என்றான்.

நாட்டை ஆளும் 'கணவனு'ம் அதே பாணியில், பதிலளித்திருக்கிறார்.

'நெசவாளர்கள் தொல்லை, நீங்கவில்லையே, அமைச்சரே!' என்றனர், நிருபர்கள்.

"ஆம்! ஆம்!! அதிகரிக்கிறது — அதுதான் பெரிய தலைவலியாக இருக்கிறது" என்று, தெரிவித்திருக்கிறார், ஆச்சாரியார்.

நாற்றம் அடிக்கிறது!—இதனை கணவன் மறுக்காதது போல, முதலமைச்சரும் நாட்டின் நலிவை மறுக்கவில்லை.

நல்ல கணவன்தான்! உண்மையை மறைக்காத அமைச்சர்தான்!! ஆனால், 'இந்த நலிவு போக்க மார்க்கம் தேடாததேன்?' என்று கேட்டால், 'நாற்றத்தைப் பூசிக் கொள்வதால்!' என்று நடுக்கமின்றி, பதிலளிக்கிறார்.

"ஏழ்மை, பெரிதும் வளர்ந்து கிடக்கிறது—இந்தியா முழுமையும். அந்தப் பெரிய பிரச்னையை சமாளிப்பது, சர்க்காருக்குத் தலைவலியாயிருக்கிறதாம். எல்லோருக்கும் தொல்லையிருக்கிறதாம்." சொல்லியிருக்கிறார், முதலமைச்சர்.

ஏழ்மை, இருக்கிறது! எங்கு? இந்தியா முழுமையும்!

பெரிய பிரச்னையாக, இந்தப் பெரிய தேசத்தை, ஏழ்மை வளைத்துக்கொண்டிருக்கிறதாம்!

சரி—ஒப்புவோம். இந்தப் 'பெரிய தேசம்' ஏழ்மையால் வளைக்கப்பட்டிருப்பதற்கும், நமது மாகாணம் துளைக்கப்படுவதற்கும், என்ன தொடர்பு?—அதனை விளக்கவில்லை, அவர்! அதனால்தான், 'சாக்கடையில் மணமில்லை' என்ற கணவனை அறிமுகப்படுத்த வேண்டியவரானோம்.

✶

தென்னாட்டின் வளங்குறித்து யாவரும் அறிவர். நாமும், விளக்காத நாளிருந்தது கிடையாது. இவ்வளவு வளமும், செழிப்பும் பெற்றிருக்கும் பூமியில், தொல்லை! ஏழ்மை!! என்ன காரணம் இதற்கு? சிங்காரமான வீடு, தென்னாடு! ஆனால், ஏழ்மை நாற்றம் சகிக்க முடியவில்லை!! எதனால் ஏற்படுகிறது இது? ஆகாயத்தில் பறக்கும் பருந்தும், நீரில் கிடக்கும் தவளையும் முடிச்சுப் போட்டுக் கொண்டதாம்—பருந்து ஆகாயத்தில் பறக்க, தவளை தவித்ததாம்! அதைப் போலத் தானே, இதுவும். சிங்காரமான நாட்டினையுடையவர், சீரழியும் பாகங்களோடு சேர்ந்துகொண்டு "பெரிய தேசமன்றோ? ஏழ்மை எங்கும் பரவியிருக்கிறது! எல்லாவற்றையும் சமாளித்து ஒழிப்பது கஷ்டமாயிருக்கிறது. சர்க்காருக்கு பெரிய தலைவலி" என்று, விளக்கமளித்தால், அவரை, எந்த உதாரணமிட்டுஅழைப்பது!

வீட்டிலே நாற்றமேன்? — இது, கேள்வி.

சாக்கடையில் மணமில்லை!—இது பதில்.

நெசவாளர் அவதி அதிகரிப்பதேன்?—கேள்வி.

இந்தியா முழுவதும், ஏழ்மை!— இது, பதில்.

ஏழ்மையுடனிருக்கிறது இந்தியா. அதனால், நாமும் ஏழ்மைக்குப் பலியாகிறோம்!—இதனை விளக்கவே, முதலமைச்சர், 'இந்தியா முழுமைக்கும்' என்று அழுத்திக் கூறுகிறார்.

"நெசவாளர் நிலைமட்டுமல்ல!—எல்லோரது வாழ்வுமே, தொல்லையாகத்தானிருக்கிறது!"-என்றாராம்.

"உண்மை! தொல்லைதான் படுகிறார்கள். ஆனால், அவ்விதம் தொல்லைப்படவேண்டிய மோசமான பூமியிலா, அவர்கள் வாழ்கிறார்கள்?"

இல்லையே! எஸ்கிமோக்கள் வாழும் பூமியல்ல நம்முடையது. கட்டாந்தரையுடையது அல்ல; கழனிகள் நிரம்பியது! பனிமூடியதல்ல—பகலவன் ஒளி பெறுவது! காடு அல்ல—பாலைவனமல்ல—படு மோசமானதல்ல—வரி வாங்காத அரசாங்கமல்ல ஆள்வது — வரி கொடுக்காத மக்களல்ல இருப்பது. இருந்தும், 'ஏன தொல்லை?' யென்றால், 'இந்தியா முழுவதிலும்'தான் தொல்லையிருக்கிறது, என்கிறார்.

இந்தியா முழுமையும் — சாக்கடையாகயிருக்கலாம்!

ஆனால், இன்ப வீட்டிலும், ஏன் நாற்றம் வீசவேண்டும்?

தெற்கில், எல்லாமிருந்தும், பருவக்காற்றால், பசி தீருமளவுக்கு விளைச்சலில்லாமலிருக்கலாம்—ஆனால் அதனைச் சமாளித்துக்கொள்வதற்கேற்ற, வருவாய் வசதியும், வளங்களும், இங்கில்லையென்று சொல்ல முடியாது. ஏனெனில், அவ்வளவு வரிப்பணம், செலுத்துகிறோம் இந்திய பீடத்துக்கு!

அவ்வளவு வரிப்பணம் செலுத்தினாலும், நாம் ஏழையாகத்தானிருக்கிறோம்.

அந்த வரிப்பணத்தில் பாதித் தொகையிருந்தால் போதும்! நம்முடைய வறுமையை சரி செய்யுமளவுக்கு, வெளிநாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்து கொள்ள இயலும்! தூர்ந்துபோன கிணறுகளைத் தோண்டித் தண்ணீர் தேட முடியும்!

அவ்வளவு வரிப்பணம் — அதனைக்கொட்டிச் செல்கிறது, இந்திய பீடம். ஆனாலும் வறுமை! இந்தியா முழுமையும் வறுமை!!

இந்த வறுமையைக் காட்டுகிறார்; நமக்கு—நண்பர் ஆச்சாரியார். இந்தியா முழுமையும் படர்ந்திருக்கும் ஏழ்மையைப் பார்த்து, 'எங்கும் தான் அப்படியிருக்கிறது!' என்று எண்ணவேண்டும் நாம் — அதனை எண்ணியபடியே வயிற்றைக் கட்டிக் கொண்டு வேதனைப்படவேண்டும்.

இதுதானு அவரது விருப்பம்? இதனை எப்படி ஒப்பமுடியும் பிறர்! வரி கொடுக்காமலில்லை நாம்! அதுவும், ஒரு சர்க்காருக்கல்ல—இரண்டு சர்க்கார்களுக்கு!!

இரண்டு சர்க்காருக்குவரிசெலுத்தும் விசித்திரமான பரிதாபத்துக்கு ஆளாகும் நம்மைப்போன்றோர், உலகிலே காணமுடியாது.

அவ்விதம் வரி செலுத்தியும் வாடுகிறோம்! ஒரு சர்க்கார்—நம்மோடு அழுகிறது. மற்றோர் சர்க்கார், நம்மைக் குறித்துக் கவலைப் படாமலிருக்கிறது.

கவலைப்படாமலிருக்கும் சர்க்காரைக் காட்டுவதில்லை, முதலமைச்சரும்—அவரது கட்சியும்.

ஆனால், கவலைப்படுவோரின் பட்டியலைக் காட்டி, 'நீங்கள் கவலைப் படுவதில் ஒன்றும், புதுமையில்லை! எல்லோரும்தான் கவலைப்படுகிறார்கள்!!' என்று செப்பவும் தவறுவதில்லை. இவ்விதம் பதிலளித்துவிட்டால் போதுமா? பொறுப்புள்ள அமைச்சருக்குத்தான் அழகாமோ!

"ஏன் தொல்லை", என்றால், "இந்தியா முழுமையும் சங்கடப்படுகிறதாம்!"

இவ்விதம், தெரிவிப்போரிடம்— 'இவ்வளவு வரி வாங்கியும் ஏன், டில்லி பீடம், மக்களைச் சங்கடப் பட வைக்கிறது?" என்று கேட்டால், புதுப் புது விளக்கங்கள் தருகிறார்கள்—காஷ்மீரப்போர்! பாகிஸ்தான் பயம்!! ஆகவே, ராணுவம் தேவை—அதற்காக இருநூறு கோடி பணம் தேவை—இத்யாதி, இத்யாதி.

வீணான வகைகளில் செலவழிக்க, ஓர் அரசாங்கம்! அதற்கு, நம்முடைய வரிபபணம்!!

அந்த அரசைத் தாங்கிக் கொண்டிருக்க, ஆச்சாரியார் போலப் பல தூண்கள்.

ஏனிந்த நிலை?—இதுதான், நம்முடைய கேள்வி!

சாக்கடை, அங்கேயிருக்கலாம்!

ஆனால், அதில் போய், நாம் ஏன் குதித்து ஆடவேண்டும்?

"ஏழ்மை—இந்தியா முழுமையும்!"

"அதோடு—நாமும், ஏன் பிணைப் பேற்படுத்திக் கொள்ள வேண்டும்......?"

இதனைத்தான் சிந்திக்க வேண்டுகிறோம்—சாக்கடையில் சந்தனம் கிடைக்குமென்று எதிர்பார்ப்போரை.

✶

## சென்னையில் 'பரப்பிரம்மம்'!

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் 26—2—53 அன்று மு. கருணாநிதி தீட்டிய மேற்படி புதிய நாடகம் நடைபெறும். புயல் நிவாரண நிதிக்காக, நடத்தப்படும் இந்நாடகத்தில் சிவாஜி கணேசன், மு. கருணாநிதி முதலியோர் நடிக்கின்றனர். நாடகம் 9–30 மணிக்கு ஆரம்பம். கட்டண விகிதம்:- ரூ. 10, 5, 3, 2, 1. நாடகதினத்தன்று கொட்டகையிலும். இரண்டு நாள் முன்னதாக ராயபுரம் கழகத் தலைமை நிலையத்திலும் டிக்கட்டுகள் கிடைக்கும்.

புயல் நிவாரண நிதிக் குழுவினர்.

# மேட்டுப்பாளையத்தில்— கண்கொள்ளாக் காட்சி!!

## கோவை மாநாடுகள்; நிகழ்ச்சி விபரம்

இயற்கை அன்னையின் பூரிப்புத் தொட்டிலாம், மேட்டுப்பாளையத்திலே, கடந்த 14, 15-தேதிகள், குதூகலத்தை வாரி, வாரி தந்தன.

கொள்கைப் பிடிப்பும், குன்று போன்ற ஆர்வமும் படைத்தசெயல் வீரர்கள் நிரம்பிய கோவைமாவட்டம், இரண்டு மாநாடுகளை நடத்தி, தனது வளர்ச்சியையும் கொள்கை வேகத்தையும் காட்டிக்கொண்டது.

மேட்டுத்தொட்டில்!—தேன்மரக் காவும், தித்திக்கும் காட்சிகளும் சூழ்ந்துகிடக்கும் அங்கே, மாநாட்டுக்கென அமைத்திருந்த பந்தலும், அதனை அழகுபடுத்தியிருந்த வகையும், கண்டோரைப் பிரமிக்கச் செய்தன.

மாநாட்டைக் கண்டறியா, பகுதி அது! ஆனால், ஆர்வத்தால் தூண்டப்பட்ட ஆசைகளோடு உலவும் வீரர்கள் உலாவும் கோட்டம்!! — ஆகவே கொள்கைக்காக 'செத்துகாட்டிய' தீரர்களாம் நெல்லிக்குப்பம் மஜீது — வண்ணை பாண்டியன் ஆகியோர் பெயர் மாநாட்டுப் பந்தலுக்கு இடப்பட்டிருந்தது. அதன் வாயிலில், அனைவரையும் வரவேற்பதுபோல் பொதுச் செயலாளரின் ஓவியம் ஒன்றும் இருந்தது. மாநாட்டின் மேடைக்கு, கோவைமாவட்ட தி. மு. க. உழைப்பாளராகயிருந்து மறைந்த உடுமலை கனகராசனின் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இவ்வளவு அழகாக ஏற்பாடுகள் யாவும் ஒழுங்காக நடைபெற்றிருந்தன. 14-ந் தேதி சனிக்கிழமை காலை நடைபெற்ற ஊர்வலத்துக்குப் பின், சமூக சீர்திருத்த மாநாடு துவங்கியது. தோழர் சிபி சிற்றரசு மாநாட்டினைத் துவக்கி வைத்தார். தோழியர் அருண்மொழி, B, O L. ஓவியக் கலைக்காட்சியைத் திறந்து வைத்தார். மாவட்டச் செயலாளரும், வரவேற்புக் கழகத் தலைவருமான தோழர் ஈ. வி. கே. சம்பத் வரவேற்புரையாற்றினர்.

பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் மாநாடு துவங்கியதும், தோழர் சம்பத், மாநாட்டுத் தலைவரைப்பிரேபிக்க தோழர்கள் என். வி. நடராசன், மதியழகன், இளம்வழுதி, வழிமொழிந்தனர். தோழர் கருணாநிதி மாநாட்டுத் தலைமை தாங்கி, தனது முன்னுரையை ஆற்றினர். பிறகு தோழர்கள் என். எஸ். இளங்கோ. வழக்கறிஞர் இளம்வழுதி, பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இரவு 10 மணிக்கு சி. என். ஏ. தீட்டிய 'காதல் ஜோதி' எனும் புதுமை நாடகம் தோழர்கள் கவிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, [illegible] எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, என். நாராயணப்பிள்ளை (ஈரோடு முனிசிபல் அங்கத்தினர்)

(6-ம் பக்கம் பார்க்க)

# மொழிவழி மாகாணம்

## டில்லியின் கருத்தென்ன?

## 'சென்னையின் உரிமை நமதே!'

### நம்முடைய நோக்கம்

[மொழிவழி மாகாணப் பிரிவினை, ஏதோ ஒரு பெரிய மலையைப் புரட்டும் காரியம் என்றளவில் டில்லி பீடத்தினரால், வெளியாருக்கு எடுத்துச்சொல்லப்பட்டு வருகிறது.

அதுபற்றிய, நம்முடைய கருத்தை விளக்கும் கட்டுரையைக் கீழே, தருகிறோம்.

16—11—47, திராவிடநாடு இதழிலே வந்த தலையங்கக்கட்டுரை இது.

ஆறாண்டுகள்! காலம்மட்டுமல்ல; கட்டுரையில் குறிப்பிடப்படும் 'சிலரது' நிலைமைகள்கூட, உருண்டு போய்விட்டன. அந்தச் 'சிலர்' யாரென்பதை வாசகர்கள் யூகித்துக் கொள்ளலாம்.

'சென்னையை ஆந்திரர் கேட்பது சிறுமதியாகும்' — என்று தெளிவுபட, அப்போதே, எழுதியுள்ளோம். நாம் எழுதியபோது, 'தமிழ்நாடா? தன்னாலே, வரும்!' என்றோரும், இன்று தனி ஆவேசம் கொண்டிருக்கிறார்கள். மகிழ்ச்சி.

இந்தக் கட்டுரைக்கு நாம் தந்திருந்த தலைப்பு "தன்னாலே வரும்!—புதிய தாரகம்" என்பதாகும்.

ஆறாண்டுகளுக்கு முன்பு, தீட்டப்பட்ட கட்டுரை இதுவென்பதை நினைவிலிருத்தி, படிக்கக் கோருகிறோம்.]

*

மராட்டியம்
கர்நாடகம்
ஆந்திரம்
கேரளம்
தமிழகம்

ஆகிய 5 மொழிவழி மாகாணங்களும் அமைக்கப்பட வேண்டும். அதற்கு எங்கெந்தப் பகுதிகள், எங்கெங்கிருந்து பிரிக்கப்பட்டு, எதெதனுடன் இணைக்கப்பட வேண்டும்? என்பதுபற்றிய திட்டம் தீட்ட வேண்டும்.

இதிலே உள்ள சிக்கல், பல. கர்நாடக அமைப்பும் மராட்டிய அமைப்பும் மட்டற்ற சிக்கலைக் கிளப்பிவிடக்கூடியவை.

ஆந்திர அமைப்பிலே, சிக்கல், அர்த்தமற்ற ஆவல் காரணமாக ஆந்திரரே ஏற்படுத்திக்கொள்ளலாமே யொழிய, இயற்கையான சிக்கல் இல்லை.

சென்னை நகரைக்கேட்கும் 'சிறுமதி' — சிக்கலை உண்டாக்குகிறதே யொழிய, மற்ற வகையிலே, ஆந்திர அமைப்புக்குத் தடையில்லை.

கர்நாடக அமைப்புக்கு, பம்பாய் மாகாணத்தாருக்குப் பெருநோக்கம் ஏற்படவேண்டும்.

எல்லாவற்றையும்விட, மராட்டிய மண்டல அமைப்புக்குத்தான் அதிக சிக்கல் இருக்கிறது.

பம்பாய் மாகாணத்திலுள்ள மராட்டி மொழி பேசும் மாவட்டங்கள், மத்திய மாகாணம், பேரார் ஆகிய இடங்களிலே, மராட்டி பேசுவோர் பெருவாரியாக உள்ள பகுதிகள், இவைகளைக்கொண்டதாக மராட்டிய மண்டலம் அமைக்க வேண்டுமென்பது திட்டம்.

இப்போது, பம்பாய் மாகாணத்திலுள்ள குஜராத், விரும்பினால், மராட்டிய மண்டலத்திலே இணைய அனுமதிக்கப்படலாம்.

மொழிவழி மாவட்டங்கள் அமைப்பது, கொள்கை அளவில் எல்லோரும் ஏற்றுக்கொண்டு விட்டனர்.

ஆனால், பிரிட்டிஷார், தங்கள்பிடியைப் பலப்படுத்தியபோது. ஏற்படுத்திய நிர்வாகத் திட்டங்களின் விளைவாகப் பல சிக்கல்கள் உள்ளன.

நிர்வாகம், ராணுவ அலுவல் இரண்டையும் முக்கியமாகக் கருதி, பிரிட்டிஷார் 'வெட்டு ஒட்டு' வேலையை அதிகமாகச் செய்துவிட்டனர். எனவேதான், ஒரே மாகாணத்திலே, பலமொழியினர், குழுமி இருக்கும் நிலை ஏற்பட்டது.

பம்பாய் மாகாணம், என்ன மொழி கொண்டது? என்றால், திட்டவட்டமாகக் கூறமுடியாது.

குஜராத், இந்தி, மராட்டி, (சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் சிந்தி.)—இவ்வளவு மொழியினரும் ஒரே மாகாணத்திலே இருக்கிறார்கள்.

எனவேதான் இப்போது, மொழிவழி மாகாணங்கள் அமைக்கும்போது, ஒவ்வொரு மாகாணமும், கொஞ்சம் இடத்தை இழக்கவோ அல்லது புதிதாகப் பெறவேண்டியோ ஏற்படுகிறது.

பம்பாய் மாகாணத்துடன், சிந்துவும், சென்னையுடன் ஒரிசாவும், வங்கத்துடன் அசாமும், பஞ்சாபுடன் எல்லையும், ஒரு காலத்தில் பிணைக்கப்பட்டு இருந்தன.

அதனால், ஏகாதிபத்யத்துக்கு ராணுவ நடவடிக்கைக்கு ஏற்பட்ட அளவு வசதி, மக்களின் நல்லாட்சிக்கு ஏற்படமுடியாது போயிற்று. எனவே, சில ஆண்டுகளுக்குமுன்பு இந்த இணைப்புகள் உடைக்கப்பட்டு புது மாகாணங்கள் உருவாக்கப்பட்டன.

இன்னும், சில சிக்கல்கள் இருப்பதற்குக் காரணமும், முன்பு பிரிட்டிஷார் கையாண்ட 'வெட்டு ஒட்டு' வேலைதான்.

ஆனால், நல்லெண்ணத்துடனும், நிதான புத்தியுடனும், நடந்துகொண்டால் இந்தச் சிக்கல்களைச் சுலபத்தில் நீக்கிவிட முடியும். இடம் அதிக வேண்டும் என்ற மண்ணாசை கொள்ளாது, ஒரே மொழியினர், ஓரிடத்தில், ஓராட்சியிலே, இருப்பதே, நலன்பயக்கும் என்ற நோக்கம் கொண்டுவிட்டால், சிக்கல் ஏற்படாது.

எல்லைத் தகராறுகளும், இடவேட்டையும், சிலபல சிக்கல்களை உண்டாக்கினாலும், அவை, தீர்க்கப்பட்டுவிடும் என்பதிலே, சந்தேகம் இல்லை. ஆனால், சென்னை தமிழரசுக் கழக மாநாட்டிலே, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் கூறியது போல, "தானாக வந்துவிடும்" என்று எண்ணிக்கொண்டு, 'உரிமைகளை' வற்புறுத்தாமலோ, மற்றவர்கள் மனம்போன போக்கில் நடக்கவிடுவதோ கூடாது. எனவே, ஆர்ப்பாட்டக் குரலிலே ஆந்திரர் கூறியது கேட்டும், 'தன்னாலே வரும்' என்று கூறுவது, தட்டிக்கழிக்கும் போக்கு ஆகும் என்கிறோம்.

*

தமிழரசுக்கழக, மாநாட்டிலே திரு. வி. க., படேலிசத்தைக் கண்டித்தாரே பலமாக—எப்படி முடிந்தது? வடநாட்டுப் பாசிசத்தை வன்மையாகக் கண்டித்தாரே, அது, எதைக் காட்டுகிறது? தமிழ் மாகாணம், மட்டுமல்ல, அவர்கள் கேட்பது—அது மட்டும் கேட்பதானால், காமராஜர் போதும், அவர் கூறும், 'தன்னாலே வரும்' போதும்! ஆனால் திரு. வி. க. வலியுறுத்திக் கூறினது போலவும், ம. பொ. சிவஞானம், இடித்துக் காட்டினது போலவும், அடிமைத் தமிழ் மாகாணம்—எதற்கும் வடக்கு நோக்கும் நிலைமை—கட்டளையை நிறைவேற்றிவைக்கும் காரியாலயக் குமாஸ்தாக்களின் கூடம்—வேண்டாம், தன் நிலையைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும், அதிகாரம் வேண்டும் என்பதுதான், அவர்கள் கோரிக்கை.

"தன்னாலேவருவது" அல்ல அது?

எந்தக்கால முதற்கொண்டு. வடக்கு நோக்கும் நிலையும், பாசிசமும் காங்கிரசில இருந்து வருகிறது என்பதைத் திரு. வி. க. வின் பேச்சு எடுத்துக்காட்டிற்று.

"நானும் பெரியாரும், வ. உ. சிதம்பரமும், காங்கிரசில் பாசிசம் புகுந்ததால், தனிமனிதரின் உரிமையைக் காப்பாற்றவே, அதைவிட்டு வெளி ஏறினோம்" என்று பேசியிருக்கிறார், திரு. வி. க.

இந்தப் பாசிசப் பிடியிலிருந்து 'தன்னாலே விலக' முடியாது! இதை உணர்ந்த சில காங்கிரசார் துவக்கியிருப்பதுதான், 'சுயநிர்ணய உரிமையுள்ள தமிழகம்' வேண்டும் என்ற கிளர்ச்சி. அது குழப்பம்—தேவையற்றது—என்கிறார் காமராஜர். நாம் கூறுகிறோம், அது தேவை என்று மட்டுமல்ல, அதுபோதாது, மேலும் கொஞ்சம் தெளிவாக, இன்னும் சற்றுப் பலமாக, போகப் போக வேகத்துடன், வளரவேண்டும், பாசிசப் போக்கைத் தாக்கும் முறை.

தமிழரசுக் கழகத்தின், இந்தக் கோரிக்கை வலுத்து, எதிலேபோய் முடியும் என்பதை உணர்ந்துதான், காமராஜர், 'தன்னாலேவரும்' என்று கூறித், தடை உத்தரவு போடுகிறார்.

திரு. வி. க. இந்தக் கவலை, அன்று, அதிகரிக்கச் செய்துவிட்டார்.

திராவிடம்—திராவிடநாடு—என்று பேசிவிட்டார்.

பாசிசமே படேலிசம் என்று பட்டவர்த்தனமாகக் கூறிவிட்டார்.

மொழிவழி மாகாணங்கள் முதலில் அமையும், பிறகு, அவை தம்முள் ஓர் கூட்டாட்சி ஏற்படுத்திக் கொள்ளும்—அதுதான் திராவிடநாடு—என்று தெளிவாகக் கூறிவிட்டார்.

எல்லையைக் குறிப்பது மட்டுமே தமிழரசுக் கழகத்தின் வேலையாக இருக்குமானால், காமராஜர் சொன்னதுபோல, இதற்குத் தனியாக ஒரு கழகம் தேவையா என்றுகூடக்கேட்கலாம்—ஆனால் அப்போதும், 'தன்னாலேவரும்' என்றபேச்சு உதவாது. ஆனால் நோக்கம், எல்லைப் பிரச்சினை மட்டுமா! அல்ல!

எல்லை கோலும் வேலையைமட்டும் செய்வதானால், பரவாயில்லையே, புதுத் தொல்லையல்லவா இவர்களால் உண்டாகும்போலிருக்கிறது என்று—எண்ணுகிறார் காமராஜர்.

அவர் யூகம், சரி. எல்லை பற்றிமட்டுமல்ல அவர்கள் எடுத்துச் சொல்வது. உண்மையில், அதைப் பற்றிமட்டும் அவர்கள் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

"வேங்கடம் நமது எல்லை!"

---

## சென்னை—தமிழரதே!

வாஞ்சுவின் அறிக்கை வஞ்சிப்பதாகும்

*

தமிழ் பேசும் பகுதிகள் தமிழகத்தைச் சேர்ந்தவையே

*

தகராறில்லாத விஷயம்! தயங்குவதேன், டில்லி?

*

தோழர்களே! எண்ணிப்பாருங்கள்!!

---

"சரி, பெறுவோம்"

"தடை உளது. ஆந்திரர் பிடி பலமாகிறது"

"நீக்குவோம்"

"அதையே கூறவந்தேன், தமிழகம் சிதையாமல் வேண்டும்"

"தமிழகம், எல்லை கோலியான பிறகு எப்படி இருக்கும்"

இந்த நிலை பிறந்ததும்; 'வடவேங்கடம் தென்குமரி' வரை தமிழகம் இருக்கும் என்றுமட்டும் சொன்னால் போதாது. சுதந்திரம், சுயநிர்ணயம், சமதர்மம்-இருக்கும்-என்று துவங்கி திரு. வி. க. கூறினது போலே, சென்று தீரவேண்டியே வரும்! அந்த நிலை, விரைந்து வருகிறது!

★

## நடைபெற்றவை

இலங்கை: 9—2—53 கொழும்பு தென்பகுதி தி. மு. கழகத் திறப்பு இரவு 9-30 மணிக்கு கொள்ளுப்பட்டி கிரீன்பாத் ரோட்டிலுள்ள பாசுமணி மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. என். டி. சுப்பையா தலைமை வகிக்க, எஸ். கே. மாயாகிருட்ணன் திறந்துவைக்க, எஸ். வி. இராமச்சந்திரன் கொடியேற்றிவிக்க எ. இளஞ்செழியன், எ. நாச்சியப்பா, எம். எஸ். குலசேகரன் ஆகியோர் பேசினர்.

மலையாண்டிபட்டணம்: 12-2-53 வியாழன் மாலை தி. மு. க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழியர்கள் சத்தியவாணிமுத்து, பூங்கோதை ஆகியோர் பேசினர்.


இரண்டாம் பதிப்பு

தி. மு. க. கொடியுடன்

சி. என். ஏ. படம்

8x6 ஓவியம் பாஹுபிரதர்ஸ்.
மூவர்ணப் படம் 0—2—0.
கழிவு 40%

கடலூர் புரட்சிதாசன் தீட்டிய
"ஒரே ஆசை" என்னும்
நாடகநூல் ஒரு பிரதி 1—0—0.
கழிவு 50%

M. Ramiar,
12, N. N. G. 10th Law,
Madras.



புயல் நிவாரண நிதிக்காக

—★ சென்னை ஒற்றவாடையில் ★—

26—2—53 வியாழன் இரவு 9-30 மணிக்கு

மு. கருணாநிதி, சிவாஜி கணேசன், முதலியோர் நடிக்கும்

★ பரப்பிரம்மம் ★

புது நாடகம்

தோழர் இரா. நெடுஞ்செழியன், M. A., தலைமையில் நடைபெறும்.

# கோவை மாநாட்டுத் தீர்மானங்கள்

## தோட்டத் தொழிலாளர் வாழ, வழி செய்க!

1. (அ) கேரளயூனியன்சர்க்காரின் கீழுள்ள மலுக்கப்பாரைத் தோட்டத்தில் தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் தினக்கூலியைவிட கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மலுக்கப்பாரை தோட்டத்தை ஒட்டியிருக்கும் இதர தோட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் தினம் ஏறக் குறைய எட்டணு கூலி குறைவாக வாங்குகிறார்கள். வேலைத்திறனிலோ, வேலைப்பளுவிலோ எவ்வித ஏற்றத்தாழ்வுமில்லாத ஒரேரக தொழிலாளர்கள், மலுக்கப் பாறையில் வாங்கும் அதிகபட்ச கூலியை கோவை மாவட்டத்திலுள்ள தோட்டத் தொழிலாளருக்கும் வாங்கிக் கொடுக்குமாறு சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(ஆ) தோட்ட முதலாளிகளால் அமர்த்தப்பட்டிருக்கும் டாக்டர்கள் இளந்தொழிலாளர்கள் அதிகக் கூலிக்காக தாங்கள் மேஜர் ஆனதை நிரூபிக்க, டாக்டர்களிடம் அத்தாட்சி பெற அனுப்பப்படும்போதும், நஷ்டஈடுகளுக்காக டாக்டர்களை அணுகும் பொழுதும், முதலாளிகளுக்குச் சாதகமாய் டாக்டர்கள் நடந்து, கொள்ளும்போது கோவை மாவட்ட தலைமை வைத்திய அதிகாரி (D. M. O )யிடம் அப்பீல்செய்து அத்தாட்சி பெறுவதற்குள்ள வழிவகைகளை சர்க்கார் சுலபமாக்க வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(இ) தோட்டங்களில் பெண் தொழிலாளர்கள் தலையில், கயிறுகளை மாட்டி முதுகில் பிரம்பினால் செய்யப்பட்ட பெருங் கூடைகளை முதுகின் மேல் சுமந்துகொண்டுதான், கொழுந்து எடுக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு அம்முறையைக் கைவிடுமாறு தோட்ட முதலாளிகளை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(ஈ) தோட்டங்களில்வேலையில்லாமல்உபரியாயிருக்கும் தொழிலாளர்களையும் பதிவு செய்து அவர்களுக்குப் வேலை கொடுக்குமாறு தோட்ட முதலாளிகளை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(உ) வாரம் ஆறுநாள் வேலைகொடுத்து வந்ததை நிறுத்தி 4, 5-நாள் வேலைகொடுத்து அதில் உண்டாகும் இலாபத்தைக்கொண்டு போனசாகக் கொடுப்பதையும் 1951-ம் ஆண்டில் கொடுத்த எட்டேகால் சதவிகிதம் கொடுத்து வந்த போனசை 1952-ம் ஆண்டில் ஆறேகால் சதவிகிதமாக தோட்ட முதலாளிகள் குறைத்ததையும் இம்மாநாடு கண்டிப்பதோடு துண்டித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் பாக்கி 2-சதவிகிதப் போனசையும் தொழிலாளர்களுக்கு உடனடியாகக் கொடுக்குமாறு தோட்ட முதலாளிகளை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(ஊ) தோட்ட முதலாளிகள்வைத்து நடத்திவரும் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குக் கிடைத்துவரும் சம்பளத்தைக் காட்டிலும், வால்பாரை பஞ்சாயத்து போர்டு நிர்வாகத்தில் நடந்துவரும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த விகிதம் சம்பளம் தரப்பட்டு வருவதை இம்மாநாடு கண்டிப்பதோடு, அரசாங்கம் சமீபகாலத்தில் சிபார்சு செய்துள்ள அதிகபட்ச சம்பள விகிதப்படி சம்பளம் கொடுக்குமாறு வால்பாரை பஞ்சாயத்துபோர்டாரை இம்மாநாடு கேட்டுக் கொளகிறது.

ஜெபக்கனி, ராமானுஜம்.

## விவசாயிகளுக்கு பஞ்ச நிவாரணம் கொடு!

2 (அ) ஐந்து ஆறு ஆண்டுகளாக பருவமழை தவறியதால் தமிழ்நாட்டின் பெரும் பகுதியான பாகங்களில் விளைச்சல் இல்லை. விவசாயத்தையே நம்பி வாழ்ந்த பெரும்பாலான மக்கள் வாழவகையின்றி, உள்ள பொருள்களையும் விற்று விட்டுத் தவிக்கின்றனர். ஆகவே அரசாங்கம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாக கடனைப் பொருளோ கருவியோ கொடுப்பதன்றி இரண்டாண்டு வரிவஜா செய்யுமாறு இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) மேற்படி பஞ்சப்பிரதேசங்களில் உடனடியாகக் கஞ்சித்தொட்டிகளை அமைத்தும், ஏற்கனவே நடந்துகொண்டிருக்கும் கஞ்சித் தொட்டிகளை யாவருக்கும் பயன்படுமாறு ஜாதி, மத, வயது வேறுபாடின்றிவழங்குமாறும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

சாமிநாதன், பொன்னுசாமி

## மின்சார வெட்டு—தொழிலாளர் அவதி

3. (அ) மின்சாரவெட்டினால் ஆலைத்தொழிலாளர் வருமானம்குன்றி அவதிப்படுகிறார்கள். அரசாங்கமோ அல்லது சம்பந்தப்பட்ட ஆலையோ அவர்களுக்கு மாதத்துக்குத் தேவையான உதவியை இனமாகஅளிக்க முன்வரவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(ஆ) மேற்படி தொழிலாளர்க்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் முனிசிபல் அல்லது பஞ்சாயத்து போர்டுகளிலிருந்து, வீட்டுவரி தொழில் வரிவஜா செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

நடராஜ், ரகுராமன்

4. இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி கடற்படைத் தோட்டாக்கள் செய்யும் தொழிற்சாலையை அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலையுடன் இணைத்து இதை விரிவுபடுத்துமாறு மத்திய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

ஒளியழகன், அன்பன்

5. குன்னூரில் மத்திய சர்க்காரின்கீழுள்ள உணவுச்சத்து ஆராய்ச்சி நிலையத்தை ஐதராபாத்துக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருப்பதை இம்மாநாடு கண்டிப்பதுடன், அவ்வாராய்ச்சி நிலையத்தை மீண்டும் அங்கிருந்தே நடாத்தக் கேட்டுக்கொண்டு சென்ற மாநாட்டுத் தீர்மானத்தை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

அப்பாவு, ரத்தினம்

## நீலகிரிக்கு கல்லூரி தேவை!

6. நீலகிரி மாவட்டத்தில் கல்லூரி இல்லாத காரணத்தால்அங்குள்ள மாணவர்கள் 'கல்லூரிப் படிப்பிற்கு வசதியின்றித் தொல்லைப்படுகிறார்கள்' ஆகவே உடனடியாக அங்கு ஒரு கல்லூரியை ஏற்படுத்தமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

இளங்கோ, பழனிச்சாமி

7. வேலையில்லாது அவதியுறும் முன்னாள் இராணுவத்தினருக்கும் ஆங்கிலேயர் வெளியேறிய நாளிலிருந்து வேலையில்லாது அவதியுறும் வீட்டுவேலைத் தொழிலாளருக்கும் வீணேஉள்ள தரிசு நிலங்களை பட்டா செய்து உற்பத்தியைப் பெருக்குமாறு இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

நாராயணசிங், நடராஜ்

## 'பராசக்தி' தடை—கண்டனம்

8. 14—2—53 முதல் பராசக்தி திரைப்படத்துக்கு தடை விதிக்க மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்வதாக தெரிகிறது. அப்படி தடை செய்யப்பட்டால் அது இந்நாட்டின் ஜீவாதாரமான உரிமையை பறிப்பதாகுமாதலால் இம்முயற்சியை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

முத்தியாலு, ஆறுமுகம்

9. இன்று நடை முறையில் இருக்கும் ரூபாய் நோட்டில் ஒன்றேகால் கோடி மக்களால் பேசப்படும் மலையாள மொழியை அதில் பொறிக்காதது குறித்து இம்மாநாடு அரசியலாரை வன்மையாகக் கண்டிக்கின்றது.

பால்ராசு, சுந்தரம்

10. கேரளத்தில் இயக்க பிரச்சாரத்திற்காக மலையாள மொழியில் ஒரு பத்திரிக்கையை நடத்தவும், பிரச்சாரம் செய்ய ஒரு குழு அமைக்கவும் மத்திய கழகத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தங்கவேலு, பழனிச்சாமி

11. பிரஜா உரிமை இழந்து இலங்கை சர்க்காரின் கொடுமைக்கு ஆளாகி அல்லலுறும் பெருவாரியான திராவிடர்கட்கு இந்திய சர்க்கார் எந்த விதமான உதவியும் செய்ய முயற்சி எடுக்காததை இம்மாநாடு கண்டிப்பதுடன் சென்னை சர்க்காரை இதற்கு ஆவன செய்யுமாறு இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

செழியன், சண்முகநாதன்

12. கோவை மாவட்டம் முழுவதும்மழையின்மையால் கிணறுகளில் வறட்சி ஏற்பட்டு நீலகிரிமக்கள் அவதியுறுகின்றனர். அரசியலார் இராணுவத்தினரை விட்டு கிணறுகளை ஆழப்படுத்தி தண்ணீர் வசதி செய்து தருமாறு அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

அற்புதசாமி, முத்து

## புகையிலை வரி—ரத்து செய்

13 (அ) புகையிலைவரி என்ற பெயரால் திராவிடத்திலிருந்து 9 கோடி ரூபாய் வடநாட்டிற்குச் செல்கிறது. ஆகவே அந்த வரியை ரத்து செய்ய வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(ஆ) புகையிலை மார்க்கட்டிங் சொசைட்டி என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த சர்க்கார் முயற்சி செய்து வருகிறது. அந்த அமைப்பினால் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் எந்த விதமான நன்மையும் இல்லாத காரணத்தினால் அதற்கு மாறாக அநேகதொல்லைகளே இருக்கின்றன எனவே, அம்மாதிரி அமைப்பை ஏற்படுத்தக் கூடாது என்று இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

ரகுபதி, கண்ணன்

14. பெண்கள் சமுதாயத்திற்கு பேரிழிவு செய்யவரும் கொடுமைகளை ஓரளவுக்காவது தகர்த்தெறிய இந்து சட்ட திருத்த மசோதா என்ற பெயரால் டெல்லி பாராளுமன்றத்தில் கொணடு வரப்பட்டு இருக்கும் சட்டத்தை நிறைவேற்றுமலிருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு அச்சட்டத்தை உடனடியாக நிறை வேற்றுமாறு பாராளுமன்றத்தையும் டெல்லி சர்க்காரின் தலைவர் ராஜேந்திரரையும் கேட்டுக் கொள்கிறது இம்மாநாடு.

பொருட்செல்வி, செல்லக்கண்ணம்மாள்

## லாரி-பஸ்கள் வரியை அதிகரிக்காதே

15. மற்ற மாகாணங்களில லாரி பஸ்களுக்கு விதிக்கப் பட்டிருக்கும் வரிகளை காட்டிலும்ஒன்றரைமடங்கு வரிகள்சென்னை மாகாணத்தில் விதிக்கப் பட்டிருப்பதோடு 1—2—53-லிருந்து லாரிக்கு மூன்று மாதத்திற்கு ரூ. 67—8—0 வீதமும், பஸ்ஸுக்கு ஒரு சீட்டுக்கு ரூ 12—8—0 வீதமும் அதிக வரி விதிக்கப்பட்டதானது (ஏற்கனவே ஸ்பேர் பார்ட்ஸ், பெட்ரோல் விலை ஏற்றத்தால் அவதிப்படும் பஸ், லாரி சொந்தகாரர்களுக்கும், தொழிலாளர்களுக்கும்) மிகவும் கொடுமையானதாகும். எனவே இந்த வரிவிதிப்பை ரத்து செய்யுமாறு சென்னை சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

எம். இ. ரகுபதி, கண்ணன்

16. கைத்தறி நெசவாளர்கள் துயர்தீர, அவர்கள் வறுமை நீங்க கைத்தறித் துணிகளை மத்திய கூட்டுறவு பேங்குகள் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டும் என்று சென்னை சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

சண்முகநாதன், வகு. இரா. பெருமாள்

17. கோவை சிட்டி ட்ரான்ஸ் போர்ட் நிர்வாகிகள், தங்கள் கம்பனியில் வேலை செய்யும் 65 தொழிலாளர்களை தொழிற்சங்கத்தில் சேர்ந்து தொழிற்சங்கத்தை அமைத்தார்கள் என்பதால் வேலையில் இருந்து நீக்கியதை இம்மாநாடு கண்டிப்பதுடன், அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்து கொள்ள சர்க்கார் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுகிறது.

மயில்சாமி, பா. பா. ராசு

## 'வானொலி'யின் போக்கு—கண்டனம்

18 தமிழ்நாட்டு வானொலிநிலையங்களான சென்னை — திருச்சி வானொலி நிலையத்தார் நிகழ்ச்சி முழுவதும் பழமையும் மூடநம்பிக்கையும் வளர்க்கும் முதல் பிரச்சாரமாகவே இருக்கின்றது. நிகழ்ச்சியில் பெரும்பாலும் பார்ப்பனர்களுக்கே இடம் தரப்படுகின்றது. எனவே அரசியலார் இதை மாற்றி திறமை உடைய, யாவருக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்குமாறு அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

சி. என். அரசு, சி. டி. தண்டபாணி.

## கவிஞர்களை, அவமதிப்பதா?

19. இந்தியக் கவிஞர்களை சிறப்பிக்கும் முறையில் தபால் தலைகளில் அவர்களின் உருவங்களைப் பதிப்பிக்கும் முறையில், திராவிட நாட்டைச் சேர்ந்த (தமிழ், மலையாள, ஆந்திர, கன்னட) முற்போக்கு கவிஞர்களின் உருவம் வராதது குறித்து இம்மாநாடு மத்திய சர்க்காரைக் கண்டிப்பதுடன், உடனடியாக திராவிட நாட்டு கவிஞர்களின் உருவங்களைத் தபால் தலைகளில் பதிப்பிக்க வேண்டுகின்றது.

சி. டி. தண்டபாணி, எஸ். அப்பாவு

# ‘நீலமலை’ வழங்கிய விருந்து!

## களித்தனர் மக்கள்; முழங்கினர் வீரர்கள்

### “இலட்சிய முகட்டை எட்டுவோம்!”

“பழைய தமிழ்ப்படம் ஒன்றில், கலைவாணர் கிருஷ்ணன், கச்சேரி செய்யும் பாகவதராக வருகிறார். ஒரு நாள் இசை நிகழ்ச்சிக்கு மிருதங்க வித்வான் கிடைக்கவில்லை. தெருவிலே பறையடித்துச் சென்ற ஒரு தப்பட்டைக்காரனை தயார் செய்து கச்சேரியை ஆரம்பித்தார். ‘ராமனீசமா’ என்ற பாடலை பாடினார். மிருதங்கம் அவரோடு ஒத்துழைக்கவில்லை. முயற்சித்தார், முயற்சித்தார் முடியவில்லை. கடைசியில் மிருதங்கக்காரனுடன் பாகவதர் சோர்ந்துகொண்டார்.

இது போன்ற பாகவதர்களாய் நாட்டிலே நடமாடும் கட்சிகள் பல இருக்கின்றன. மக்கள் எந்த வழியில் ஓடுகிறார்களோ—மக்களை மதவாதங்கள் எந்தப் பாதையில் இழுத்துச் செல்கின்றனவோ அந்தப் பாதையில் மக்களோடு சென்று தங்களுக்குத் தேவையான காரியங்களை நிறைவேற்றிக் கொள்கின்றன. மிருதங்கக்காரனை தன் பக்கம் இழுக்க முடியாத பாகவதரைப் போல, அவன் பக்கமே சென்று கச்சேரியை கெடுத்துவிடும் நிலைமையைப்போல நாட்டைக் கேடு நிறைக் காடாக்கும் கட்சிகள் பல உள. சமுதாயத்திலே சாக்கடைப் புழுக்களாய் ஆக்கப்பட்ட மக்களை—இதிகாசத்தின் பெயரால் — கடவுளின் பெயரால்—கலைகளின் பெயரால்— அடிமைப்படுத்தப் பட்டவர்களை புது ஜோதி காட்டி அழைக்கும் இயக்கம்—நமது திராவிடர் இயக்கந்தான்! எதிர் நீச்சல் போடும் பணியிலே எதிர்ப்புகளை அலட்சியச் சிரிப்பால் சிதறச் செய்து சிந்தனை புரிக்கு திராவிட சமுதாயத்தை இட்டுச் செல்லும் ஈடு மஇணையுமற்ற காரியத்தை நமது பாசறைதான் கட்டுப்பாடோடு — கடமை தவறாமல் செய்து காட்டி வருகிறது.

உலகத்தின் பலபகுதிகள், அறிவு விளக்கைக் கரத்திலே ஏந்தி நிற்கும் இந்தக் காலத்திலும் — மேதைகளெனப் புகழப்படும் பலர்—இங்கே பழமைக்குப் பங்கா இழுக்கும் பணியைப் பக்தி சிரத்தையோடு கவனிக்கின்றனர்.

மாஸ்கோவின் பிரதிநிதியாயிருந்த ராதாகிருஷ்ணன் மகேசனுக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு குறித்தும் ஆண்டவன் மகாத்மியம் குறித்தும் காலக்ஷேபம் செய்கிறார். மைசூரிலே மழை வேண்டி யாகம் நடக்கிறது. இதற்கு நமது மாகாணம் 300 மூட்டை அரிசி வழங்குகிறது.

ராஜேந்திர பிரசாத் இருநூறு பார்ப்பனர்களின் காலைக் கழுவி வணங்குகிறார்.

ஆட்சி முறையின் கோணங்களை மறைக்க ஆண்டவன் மீது பாரத்தைப் போடுகிறார் அமைச்சர் ஆச்சாரியார். இத்தாலி நாட்டில் Prince என்ற புத்தகம் எழுதிய மாக்கி வெல்லி என்பான், ஆட்சியில் குறை ஏற்பட்டால் மக்களை மயக்க கடவுள்மீது பாரத்தைப் போடு என்று குறிப்பிடுகிறான். மாக்கி வெல்லி எழுதிய நல்லவைகளை விட்டு விட்டு, அவன் நூலிலேயிருந்து லெனினும் ஸ்டாலினும் கற்றுக் கொண்டதை விடுத்துவிட்டு இட்லரும் முஸோலினியும் அவன் நூலில் ஏற்றுக்கொண்ட பாகங்களை ஆச்சாரியார் பின்பற்றுகிறார்.

நாடெங்கும் திருவெம்பாவை, திருப்பாவை மாநாடுகள். அதிலே புதுக் கருத்துக்களுக்கு வசைமாரி புராணங்கள். நாட்டின் மூலவர் எனவும் முடிசூடா மன்னர் எனவும் போற்றப்படும் நேரு, ராமநவமியிலே ராவணனைக் கொளுத்தும் காட்சியை பேரக்குழந்தைகளுடன் ரசிக்கிறார்.

இத்தகைய அக்ரமங்கள் — சமுதாயத்திற்கு சவக்குழி வெட்டப்படும் சண்டாளத்தனங்கள் — சாமான்ய மக்களால் அல்ல; சகல கலை கற்றவர்கள் எனப்படுவோரால் நடத்தப்படுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல்—பொருளாதார—சமுதாய விடுதலைக்காகப் போராடுகிற ஒரு பெரும் இயக்கம். அதற்குத் தெரியும்; ரஷ்யாவில் பீட்டர் திகிரேட் என்பவன் தாடி வைக்கும் பழக்கத்தை ஒழிப்பதற்காகத் தானே முன்னின்று போர் துவக்கினான், சன்யாட்சன் கையிலே கத்தி எடுத்து சடைகளைக்கத்தரித்தான்.

துருக்கியிலே, கமால், கட்டாய சீர்திருத்தம் கொண்டுவந்தான். Fex என்ற தொப்பியை அணிவதைக் கிழித்தெறியச் செய்தான். கோஷாமுறையை ஒழித்தான்.

அத்தகைய நேரடி நடவடிக்கைகள் எதுவுமில்லாமலே — பிரச்சார மூலமாகவே. நாம் பெரு வெற்றியடைந்திருக்கிறோம். ஆனாலும் நமது லட்சியப் பாதை முடிந்துவிடவில்லை. சீர்பெற்ற சமுதாயம் தான் நிரந்தரமான தனியரசை அமைக்கமுடியும். அதற்காகப் பாடுபடுவோம். அந்தப் பணியிலே நாம் சாக்ரடீஸ்களாக ஆக்கப்பட்டாலும் கவலையில்லை. சாக்ரடீசைச் சாக அடித்தவர்கள்—பிறகு அவனுக்குச் சிலை அமைக்க லிசிப்பஸ் என்ற சிற்பியைத் தேடி ஓடினார்கள். சிலர், தாம் செய்த குற்றத்தை உணர்ந்து, தற்கொலை செய்து கொண்டார்கள். இந்தச் சரித்திர உண்மையைப் படித்திருக்கிற நாம், ‘எதையும் தாங்கும் இதயம் உண்டு’ என்ற கீதம் பாடியபடி இலட்சிய முகட்டை எட்டுவோம்!” என்று சீர்திருத்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய தோழர் மு. கருணாநிதி முழக்கினார்.

### “நமது நிலை என்ன?

“நாங்கள் கூத்தாடிகள்தான்! கூத்தாடி என்ற சொல்லுக்கிருந்த இலட்சணங்களை மாற்றியமைத்தவர்கள். கூத்தாடும் சாதனங்களை சமுதாயத்தை மாற்றும் சாதனமாக, அதுவும் மிகத் திறமையாகக் கையாண்டு வருகிறோம். இதைக் காணும் சிலர் இவர்கள் என்ன சோஷியல் ரீபார்மரா, பாலிடிஷியன்ஸா? என்று சந்தேகப்படுகின்றார்கள்.

டாக்டர்களில் ‘ஜெனரல் ஸ்பெஷலிஸ்ட்’ என்று சிலர் இருப்பார்கள். அவர்கள் காயத்திற்கும் மருந்து போடுவார்கள். சித்தபிரமைக்கும் சிகிச்சை செய்வார்கள். காசநோய்க்கும் ஊசி போடுவார்கள். அதைப் போன்றுதான் நாங்கள், நோயாளியாயுள்ள இன்றைய சமுதாயத்தின் ஜெனரல் ஸ்பெஷலிஸ்டுகள்.

மற்ற நாடுகளில்—இங்கிலாந்தில், ரஷ்யாவில், அமெரிக்காவில், சமுதாய சீர்திருத்தம் தேவையற்றதாகிவிட்டது. ஏமாளிக்கூட்டம் இன்று அங்கே இல்லை. அந்த ‘பைல்’ மூடியாகிவிட்டது. எந்த ரீதியில் பார்த்தாலும் இந்த நாட்டுக்கு உடையது இரண்டு பிரச்னைகள்: சமுதாயம், அரசியல்.

இங்கிலீஷ் பத்திரிகைகளைப் படித்துவிட்டு அந்த நாட்டு அரசியல் கட்சிகளைப்போலவே நமது நாட்டிலும் நடத்தவேண்டுமென்று முனைந்தவர்களின் முயற்சி என்னவாயிற்று? உதாரணமாக சர். பி. டி. ராஜன் அவர்களை எடுத்துக்கொள்ளுங்கள். நான் ஏன் அவர் பெயரை குறிப்பிடுகின்றேன் என்றால், அவர் நமக்குத்தெரிந்தவர், நமக்கு வேண்டியவர், நல்லவர் என்பதற்காகத்தான். அவருடைய முயற்சி சரியானதாக இருந்திருந்தால், அல்லது இந்த நாடு இங்கிலாந்தைப்போல, பிரான்சைப்போல, அமெரிக்காவைப்போல இருந்திருந்தால், அது வெற்றிபெற்றிருக்கும்!

சமுதாய சீர்திருத்த பிரசாரத்தினால் பழமைப் பாசியை நீக்க பணியாற்றுகின்ற நம்மைப் பொதுவாகவே நாட்டில் இருக்கின்ற நானாவிதக் கட்சிகளும் நாஸ்திகர்கள், நலங்கெட்டவர்கள் என்ற வதந்திகளை இருட்டில் கிளப்பிவிடுகின்றார்கள். கோழைகளும், பொறாமை பொச்சரிப்புக் கொண்டவர்களும் அந்த வதந்தியை கிளப்பிவிடுகின்றனர்.

நாம் தத்துவ ஆராய்ச்சிக்காரர்களல்ல. உபநிஷத்துக்களையும் வேதங்களையும் ஓதுகின்றவர்களல்ல. நாம் அறிவோம் உபநிஷத்துக்களும் வேதங்களும் இந்த நாட்டு மக்களை எந்த நிலைக்குத் திருப்பிவிட்டிருக்கின்றன. அவைகளால் இந்த நாட்டு மக்களின் பண்பு எப்படி பாழ்படுத்தப் பட்டிருக்கின்றன, அவைகளால் இந்த நாட்டுமக்களின் அறிவு எப்படி நாசப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், பக்தி என்ற சொல், இந்த நாட்டில் விளைவித்துள்ள கேட்டை, தத்துவம் அதற்கு திரையிடுவதை, மதமும் மதத் தலைவர்களும் அதற்கு வக்காலத்து வாங்குவதையும், அவர்கள் மட்டுமல்ல, நாகரீகப் பாடங்களைக் கற்று நல்ல நிலையில் உள்ளவர்கள் கூட வேதங்களைக் கற்றோம், உபநிஷத்துக்களுக்காக உயிர் வாழுகின்றோம் என்று கூறுவதையும், அவைகளுக்காக உள்ள கடவுள்களை ஆராதிப்போம் என்று கூறுவதையும் காண்கிறோம்.

காலையிலே திறந்துவைக்கப்பட்ட கண்காட்சியில் நீங்கள் பார்க்கலாம், அன்றொரு நாள், ஐரோப்பாவில் இருந்த கடவுள்களை—விதவிதமான பெயர்கள், விசித்திரமான முகங்கள் அவைகளுக்கெல்லாம் வழிபாட்டுப் புபசாரம் தந்து விட்டார்கள். மாஜிக் கடவுள்கள் பட்டியலில் அவர்களைச் சேர்த்துவிட்டார்கள், அந்த நாட்டு மக்கள்! ஆனால் இந்த நாட்டின் நிலை என்ன?” என்று கோவை மாநாட்டுக்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசிய வரவேற்புக் குழுத் தலைவர், தோழர் சம்பத் கேட்டார்.

### “சீர்திருத்தமின்றேல் வீழ்ச்சியே”

“சர்க்கார், தன்னுடைய வெறும் இரும்புப் பெட்டியைத் திறக்கும் நேரத்தில், படிக்கப் பள்ளிகளை மாணவர்களுக்குத் திறக்கப்படாத நேரத்தில், மன்பதையை சதாமண்டையிலடித்துக்கொண்டிருக்கும் மதக்கோட்டைகளைக் குறிபார்த்து நிற்கும் நமது பிரச்சார பீரங்கியின் வாயிலிருந்து கிளம்பும் குண்டுகள், தங்கள் மதக்கோட்டைகளை இடித்துத் தரைமட்டமாக்கக் கூடாதென்ற காரணத்தால், அவைகளின் கபாடக் கதவுகளுக்கு சர்வாதிகாரத் தொனியாலும், சட்ட வல்லமையாலும் முட்டுக்கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

எந்த இனம், ஒரு நூறு ஆண்டுகள் தன்னைக் காலத்துக்கேற்ற மாதிரி திருத்திக்கொள்ள முன்வரவில்லையோ, அது அழிவது திண்ணம். இதை நாம் சரித்திர ஆதாரத்தோடு சொல்லவேண்டுமானால், சைனாவையும் ஜப்பானையும் சொல்லலாம். ஜப்பான், மேல்நாட்டு நாகரீகப்படி தன்னைத் திருத்திக் கொண்டதால், 42 கோடி மக்கள் வாழ்ந்த சீனத்தை மிரட்டவும், உலக வல்லரசுகளிலே அதுவும் ஒரு வல்லமை பொருந்தியதாகவும், அமெரிக்காவின் கவனத்தைத் தன்பால் இழுக்கும் அளவுக்கு வல்லரசாக ஆகிவிட்டது, அந்த நாடு

ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் யந்திரத்தை எப்படி நாம் அடிக்கடி பழுது பார்த்து வைக்கின்றோமோ எப்படி ஒவ்வொரு நாளும் வீட்டைக் கூட்டித் தூய்மையாக்கி வைக்கின்றோமோ, நாடி நரம்புகளை எப்படி அன்றாடம் செம்மைப் படுத்தி வைக்கின்றோமோ, வெள்ளத்தால் உடைந்துவிடும் கரையையும், வெப்பத்தால் வரண்டுவிடும் கிணறுகளையும் எப்படி அடிக்கடி சரிபார்த்து வைக்கின்றோமோ— ஏன் நாமே அன்றாடம் நம் உடலை செம்மைப்படுத்துவதற்காக குறைந்தது இரண்டு மணி நேரமாவது செலவிடுகின்றோமோ, அதே

---

**மேட்டுப்பாளையம் மாநாட்டில் புயல் நிதிக்காக வழங்கப்பட்டவை**

| | |
|---|---|
| தமிழ்நாடு பிஸ்கட் பாக்டரி தோழர் சிதம்பரம் வேட்டி | ...1 |
| கோவை அழகிரி படிப்பகம் வேட்டிகள் | ...2 |
| கோத்தகிரி தி.மு.க. வேட்டி | ...1 |
| உடுமலை கனகராசன் படிப்பகம் வேட்டிகள் | ...2 |
| அப்பர்பாளையம் அண்ணா வாலிபர் சங்கம் வேட்டி | ...1 |
| புதுமைக் கண்ணன் சத்யமங்கலம் வேட்டி | ...1 |
| சத்யமங்கலம் துணைச் செயலாளர் வேட்டி | ...1 |
| புளியம்பட்டி தி. மு. கழகம் வேட்டிகள் | ...2 |

---

**புயல் நிவாரண நிதி**

தி. மு. க. மத்ய கழகத்தின் தீர்மானத்திற்கிணங்க, தஞ்சை திருச்சி புயல் நிவாரண நிதிக்காக இதுவரையில் ஏறத்தாழ இருபத்து மூவாயிரம் ரூபாய், வசூலாகிவிட்டது. மார்ச் முதல் வாரத்திற்குள்ளாகவே குறிப்பிட்ட 2500 ரூபாய் சேர்ந்துவிடலாமென எண்ணுகிறேன்: ஆகவே, சென்னையில் நடைபெறும் நாடகத்திற்கு தோழர்கள் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர்,
நிதிக்குழு.

---

**திருத்தம்**

புயல் நிவாரண நிதி அறிக்கையில், கரூர் வைசிய பாங்க் ட்ராப்ட் மூலம் ‘ஒரு தோழர்’ என்று வந்திருந்ததை கோபி தி. மு. க. மூலம் ரூ. 25 என்று திருத்திக்கொள்ளுமாறு கோருகிறோம்.

போன்றதுதான், ஒரு சமுதாயமும் அவ்வப்போது சீர்திருத்தத்தை எதிர்பார்க்கிறது. அந்தச் சீர்திருத்தம் செய்ய எந்த நாடு முன்வரவில்லையோ, அந்த நாடு ஐஸனேவரால் ஆளப்பட்டாலும், அலகாபாத் பண்டிதரால் ஆளப்பட்டாலும், அடால்ப் இட்லரால் ஆளப்பட்டாலும், அந்தோணி ஈடனல் ஆளப்பட்டாலும், வீழ்ச்சியுறுவது திண்ணம்'' என்று சிம்மம்போல் கர்ச்சித்தார், சி. பி. சிற்றரசு.

## 'சிந்தனையும் - கலையும்'

"ஆதி மனிதனின் வாழ்க்கையிலே, தெரிந்தோ, தெரியாமலோ, கலை இடம் பெற்றது. உணவும், உடையும் தேட அவன் செலவிட்ட நேரம் போக மற்ற நேரங்கள் அவனுக்கு ஓய்வு நேரமாக இருந்தது. அந்த நேரங்களில் அவன் கண்ணெதிரே காணுகின்ற சிற்றாறுகள், மாநதிகள், சிங்காரச் சோலைகள், மலைகள், மற்றுமுள்ள இயற்கை காட்சிகள் ஆகியவைகளை ரசிப்பதில் செலவிட்டான்.

தன்னையும், சுற்றுப்புறத்தையும் பார்த்து, சிந்தித்து அவன் கண்ட காட்சிகளை கையால் எழுத இயற்கலை உண்டாயிற்று. இயற்கலை இன்னும் அழகுள்ளதாக அவன் எண்ணிய பொழுது சித்திரக் கலையை உண்டாக்கினன். சித்திரக் கலையின் வளர்ச்சியில் சிற்பக் கலையைக் கண்டான். அதுவும் போதாதென்று நிலவந்த பொழுது நாடகக் கலையை சமுதாயம் கண்டது.

"நளினமான மூளையில்லாதவன் கைப்பிடி இல்லாத வாள் போன்றவன்'' என்று அறிஞன் பக்ரோஸ் கூறுவதை நினைவுக்குக் கொண்டு வந்தால், மனித சமுதாயத்தில் கலை வளர்ந்த நிலையை நாம் நன்கு உணர்ந்துகொள்ளமுடியும்.

மனிதன் முதன் முதலில் மொழியை உடையவனக இருக்கவில்லை. தன் உள்ளுணர்ச்சியை சைகை மூலம்தான்பிறர்க்குணர்த்தி வந்தான். இந்த நிலையிலிருந்த மனிதன் புற்றரவைக் கண்டான். புதர்களைக் கண்டான், சிற்றாறுகளைக் கண்டான். சிந்தித்தான். சிந்தனை வளர்ந்து, வளர்ந்து நாடகக் கலை அவன் காணும் நிலையில் வளர்ந்தது. மனித சிந்தனையும் வளர்ந்தது, கலையும் வளர்ந்தது'' என்று தோழியர் அருண்மொழி அழகாக விளக்கினர்.

## "சுலபத்தில் கிடைக்காது"

"எண்ணூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டிருந்த, சுல்தான் ஆட்சியின்கீழ் இருந்த லாக்கடிவ், மாலடிவ் என்ற சின்னஞ்சிறு தீவுகள் சுதந்திர நாடுகளாக மாறுகிற நேரத்தில் உம்மா கட்சியின் போராட்டத்தின் விளைவாக சூடானுக்கு விடுதலையளிக்க, நகீபும், பிரிட்டிஷ் பிரதிநிதி ஸ்டமன்ஸனும் கூடிப் பேசி, திட்டமிட்டு, திட்டத்தில் ஒப்பமிடுகின்ற நேரத்தில், இருண்டு கிடந்த அரசியல் வாழ்விலிருந்து ஒளிப்பெற்ற சூடானுக்கு நேரு வாழ்த்துச் செய்தி அனுப்புகிற நேரத்திலேயே நமது உரிமையுணர்ச்சியை மதிக்க மறுக்கிற நேரத்தில் மூன்ருவது உலகப் போரின் முழக்கம் கேட்கிறது.

ஈஸ்ன்டீன் கூறினன் 'மூன்றுவது உலகப்போர் முடிந்து விட்டால் மக்கள் கற்காலத்தவராக, இரும்புக் காலத்தவராக இருப்பார்கள்'' என்று. அதாவது: இருண்ட வாழ்வில் மக்கள் இருப்பார்கள் என்று! இந்திய சர்க்கார் ஒரு நிலையில் இருக்கும் என்பதற்கு நம்பிக்கையில்லை. ஏன்?

இரண்டு மாதத்திற்கு முன்னல் அட்லி இந்த நாட்டுக்கு வந்தார். ஏன்? இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கவா? நேருவுடன் விருந்துண்டு நீண்ட நாள் ஆகிவிட்டதே, விருந்துண்டுவிட்டுப் போகலாமென்று வந்தார்? பத்திரிகை நிருபர்களுக்களித்த ஒரு பேட்டியில் அட்லி கூறினர்: 'இந்தியா கம்யூனிசத்தை நிச்சயம் தடைப்படுத்தும், அது காமன்வெல்த் நாடுகளில் ஒன்று' என்று. அவர் வந்து போனபிறகு பிவான், அதற்குப் பிறகு கல்வி நிபுணர்கள் என்ற பெயரால் ஒரு கும்பல்; ஏன் இந்தப் புதுக் காதல்?

பத்திரிகையிலே நீங்கள் பார்த்திருக்கலாம், பத்து நாளைக்கு முன்னல் அமெரிக்க கடற்படைத் தளபதியான அட்மிரல், ரிட்பிட்ஸ்பார்க் என்னும் கப்பலில் இங்கு வந்ததை. பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு உல்லாசப் பயணமாக பாகிஸ்தானின் அழைப்பின் பேரில் வந்ததாகக் கூறினர். "கைபர் கணவாயை பார்த்தேன், அதை சிறுவயதிலிருந்தே பார்க்க விரும்பினேன்'' என்று. "யுத்த மேற்பட்டால் காஷ்மீரும், ஜில்ஜெட்டும் நல்ல தளமாக உதவுமல்லவா?'' என்று பத்திரிகையாளர் கேட்டதற்கு "ஆம்'' என்று கூறியிருக்கிறார். அது மட்டுமல்ல, பாண்டிச்சேரியையும் நான் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன் என்று கூறியிருக்கிருர்! என்ன இதற்குப் பொருள்?

அதற்குப் பின்னல், எம். ஆர். ஏ. என்ற பெயரில் 60-க்கு மேற்பட்ட அமெரிக்கர்கள் டாக்டர் புகமன் என்பவரின் தலைமையில் நமக்கு ஒழுக்கத்தைக் கற்றுதர இங்கு வந்திருக்கிருர்கள். ஜப்பானிய கலாசாரக் குழு, ஜப்பானிய நல்லெண்ணத் தூதுக்குழு இவைகளுக்கெல்லாம் இந்தியாவின்மீது ஏன் திடீர்க் காதல்? இவர்களுக்கெல்லாம் ஏன் அரசாங்க வரவேற்புகள்? இந்தியா நடு நிலைமைக் கொள்கையில் இருக்கும் என்று காட்டுவதற்குரிய சூசகங்களா இவைகள்?

ஆகவே திராவிடம் தனியாகப் பிரிந்து ஒரு 'கான்பெடரேஷனை' இயங்கினலன்றி நமக்கு வாழ்விலலை. சுலபத்தில் கிடைத்து விடுமா திராவிடநாடு?'' என்று கேட்டார், தோழர் மனேகரன்.

# ஆதித்தனுக்கு பாராட்டும்-வாழ்த்தும்

## கழகப் பொறுப்பாளர் அளித்தார்

### அறிவகத்தில் நடைபெற்றது

ரஷ்யா சென்று திரும்பிய 'தினத்தந்தி' ஆசிரியர் தோழர் சி. பா. ஆதித்தனுக்கு 12—2—53 அன்று திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் தோழர் கே. எ. மதியழகனுல், பாராட்டு விருந்தொன்று அளிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் அளிக்கப்பட்ட மேற்படி விருந்து, சென்னை ராயபுரத்திலுள்ள கழகக் காரியாலயத்தில் நடைபெற்றது. மேற்படி விருந்தில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ரஷ்ய இலக்கியம்' ஆசிரியர் ப. வாணன், இரா. செழியன், சஜேந்திரன், சென்னை மாவட்டச்செயலாளர் கண்ணபிரான் பொருளாளர் கண்ணப்பர், துணைச் செயலாளர் சிதம்பரம், காஞ்சி. மணிமொழியார், டி. எம். பார்த்தசாரதி, எஸ். முத்து, அலர்மேலு அப்பாதுரை, சி. வி. ராசன், அண்ணமலை, சி. டி. டி. அரசு, பாண்டியன், நாகூர் அனீபா, கே. ஆர். செல்லமுத்து, சிவாஜி கணேசன், நடிகமணி எம். ஜி. ராமச்சந்தர், கவுன்சிலர் எம். கன்னியப்பன், 'ஜனசக்தி' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த க. முத்தையா ஆகியோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

'திராவிடநாடு' துணை ஆசிரியர் அரங்கண்ணல், சிதம்பரம் பாலகுருசாமி ஆகியோர் வாழ்த்துத் தந்திகள் அனுப்பியிருந்தார்கள்.

தோழர் ஆதித்தன் அவர்களை பொறுப்பாளர் கே. ஏ. மதியழகன் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், "நாட்டு நல்வாழ்வுக்கு, நேர்மையாகப் பாடுபடுவர்களைப் பாராட்ட தி. மு. க. தயங்காது. அத்தகையவரின் நல்லெண்ணங்களுக்கு எமது ஆதரவு என்றும் உண்டு. புதுவாழ்வும், புதுகருத்துக்களும் பூத்துப்பொலியும் ரஷ்யாவுக்கு விஜயம் செய்து உண்மைகளைக் கண்டறிந்த ஆதித்தனுக்கு, வரவேற்பளிக்கிறோம்'' என்று குறிப்பிட்டதோடு, பொதுச்செயலாளர் சார்பில் மாலை அணிவிப்பதாகக்கூறி தோழர் ஆதித்தனுக்கு மாலை சூட்டினர். பிறகு தோழர் மு. கருணாநிதியும், தோழர் இரா. நெடுஞ்செழியனும், ஆதித்தனைப் பாராட்டிப் பேசி, வாழ்த்தினர்கள்.

தனக்களிக்கபட்ட விருந்துக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு தோழர் ஆதித்தன் பேசுகையில், தன்னுடைய ரஷ்ய அனுபவங்களை விவரித்துக் கூறினர். நம்மவரைப் பற்றித் தெரிந்துகொள்ளவும்—சந்திக்கவும் ரஷ்ய மக்கள் ஆவலோடு இருப்பதாகவும் தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணதுரை, மு. கருணாநிதி முதலியோரைப்பற்றித் தாம் தெரிவித்ததாகவும் அவர்களையெல்லாம் கண்டால், ரஷ்ய மக்கள் அன்போடு வரவேற்பார்களென்றும் கூறினர்.

சந்தர்ப்பம் கிடைத்தால் ஒவ்வொருவரும் ரஷ்ய நாட்டிற்குச் சென்று வரவேண்டும் என்றும், பல உண்மைகளைப் பிரத்தியட்சமாகக் கண்டு வருவது பலன் தருமென்றும் அவர் தெரிவித்தார்.

விழாவுக்கு வந்து சிறப்பித்த அனைவருக்கும் தோழர் தில்லைவில்லாளன் நன்றி தெரிவிக்கையில் "ஆதித்தன் அவர்கள், சென்றுவந்த ரஷ்யாவைப்பற்றிப் பேசினர். அந்த நாட்டைப்போல நமது நாட்டினையும் ஆக்கவேண்டுமென்பதே, எமது ஆசையாகும். எல்லோரும் சுகமாக வாழச்செய்யும் முற்போக்குக் கொள்கைகளுக்காக ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும்'' என்று தெரிவித்தார்.

மாநாட்டில் பங்குகொண்ட ஒவ்வொரு பேச்சாளரும், நெஞ்சைக் கவரும் புள்ளி விபரங்களோடு, சொன்மாரி பொழிந்தனர்! மக்கள் மகிழ்ந்தனர்!! மாநாடுகளில் தலைமை தாங்கிய தோழர்கள் மு. கருணாநிதியும், தோழர் இரா. நெடுஞ்செழியனும் ஆற்றிய சொற்பொழிவு, 'ஆகா! எவ்வளவு அருமை' என்று நீலமலையையே அதிரவைத்தது. அவ்வளவு அழகாய், ஆணித்தரமான வாதமும கலந்திருந்தது!! இந்த அழகினைக் கண்டு மகிழ்ந்ததால்தான், பூரிப்போடு வெளியிட்டார், பொதுச் செயலாளர்—'இந்த இன்பம் நாடெங்கும் மணக்கட்டும்—நமது பிரச்சாரம் முழங்கட்டும். அதுவே, நமக்குப் பயன் தரும்' என்று. வளரட்டும் முழக்கம்! சிறக்கட்டும் திராவிடம்!!

## அறிவிப்பு

தோழர் மு. கருணாநிதி அவர்கட்கு, உடல்நிலை பாதிக்கப்பட்டு, பிரயாணம் செய்வது கூடாது என்றும், ஓய்வு பெறவேண்டுமென்றும் டாக்டர்கள் கூறுவதால், சென்னை 26-ஆம் தேதி நாடகத்திற்குப் பிறகு ஒரு மாத காலம்—மார்ச் முடியும்வரை கண்டிப்பாக எந்தக் கூட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள இயலாதென்றும், ஒத்துக்கொண்டுள்ள சில நிகழ்ச்சிகளையும் ஒத்திவைத்திருப்பதாகவும் தெரிவித்துக் கொள்கிருர்.

## பிறப்பு

நடிக நண்பர் எஸ். எஸ். ராஜேந்திரன் துணைவியார் பங்கஜத்துக்கு 3—2—53ல் ஆண் மகவு ஒன்று பிறந்து தாயும் சேயும் நலம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கே. ஆர். ஆர். குழுவினர் ஒத்துழைப்போடு நடைபெற்றது.

### மறுநாள்

15ந்தேதி காலை கோவைமாவட்ட இரண்டாவது தி. மு. க. மாநாடு துவங்கியது. தோழர்கள் நாகூர் அனீபா, சேலம் சீனிவாசன் இன்னிசை வழங்கினர். தோழர் மனேகரன் மாநாட்டைத் துவக்கிவைத்து சொற்பொழிவாற்றினர். தோழர் ஈ. வி. கே. சம்பத், மாநாட்டுத் தலைவரைப் பிரரேபிக்க தோழியர் பூங்கோதை வழிமொழிய தோழர் இரா. நெடுஞ்செழியன் மாநாட்டுத் தலைமையேற்று, சொற்பொழிவாற்றினர்.

இடைவேளைக்குப்பின் தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், கண்ணதாசன், அன்பழகன், மதியழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பிறகு தீர்மானங்கள் நிறைவேறின. உடல் நிலை சரியில்லாததால் பொதுச் செயலாளர் அண்ணதுரை கொஞ்சநேரம், கழக வளர்ச்சி குறித்துப் பேசினர்.

இரவு 10 மணிக்கு சி. என். ஏ. தீட்டிய "சந்திரோதயம்'' நாடகம் பொதுச் செயலாளர் அண்ணதுரை, மு. கருணாநிதி, வில்லாளன், மதியழகன், அண்ணமலை, போளூர் சுப்ரமணியம், முதலியோர் பங்கு ஏற்று நடிக்க விமரிசையாக நடைபெற்றது.

மாநாட்டு நடவடிக்கைகள் மக்கள் மனதைக் கவர்ந்தன! புதிய இடம்—புதுமுகங்கள். பொறுப்புமிக்க இரு மாநாடுகளும் சிறப்பாக நடைபெற்று விட்டன மாநாட்டு நிர்வாகிகளை வாழ்த்துகிறோம்! வளர்க அவர்தம் ஆர்வம்!!


**ஏஜண்டுகள், பாலிசிதாரர்கள் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும்!**

எங்களுடைய கிளை அலுவலகத்தை "9-B/22, பிராட்வே (2-வது மாடி—லோன்ஸ்குயர் அருகில்) ஜி. டி. மதராஸ்'' என்ற விலாசத்திற்கு மாற்றியிருக்கிறோம்.

டெலிபோன் நெ-4799, தந்தி 'யூனிபிராஞ்ச்'

**தி யூனிவர்சல் பயர் அண்டு ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.**

உயிர், தீ, நீர் மற்றும் பலவகை இன்சூரன்ஸ் (மோட்டார், தொழிலாளர்கள் ஈடு, முதலியன.)

V. P. சீனிவாசன்,
பிராஞ்ச் மேனேஜர்.


Editea Printed & Published by C. N. Annadurai M. A, "Dratavida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.